# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC No.176/2024**

பெயர் சதாசிவம் (PW5)

நாள் 16.06.2026

MP எண்.4/2026 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி ஆஜர் செய்யப்பட்டு
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையை புகாரின் அடிப்படையில் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட சாலையானது ஈரோடு டூ பழனி மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்த புகார் மனு, முதல் தகவல் அறிக்கையில் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தில் எந்த இடத்தில் மோதியது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை சுமார் 15 நாட்கள் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சாயில்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், காவல்நிலையத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. விபத்து ஏற்பட்ட சாலையானது இருவழி சாலை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.16 20:18:45 +0530